**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 2730/ஆ5/2024, நாள் : 09.07.2024**

பொருள்: பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – HCL நிறுவனம் Tech Bee மற்றும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் Early Career Program – தேர்வு முகாம் நடத்துல் – தொடர்பாக

பார்வை : HCL நிறுவன மண்டல உதவி மேலாளரின் அவர்களின் கடித நாள். 03.07.2024

•••••

பார்வையில் காணும் கடிதத்தின்படி அரசு / அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் 2023–2024 ம் கல்வியாண்டில் பனிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு HCL நிறுவனம் Tech Bee மற்றும் நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புடன் உயர்கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குகிறது.

எனவே 2023–2024ம் கல்வியாண்டில் 12–ம் வகுப்பில் 75% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் (கணிதம் / வணிக கணிதம் பயிலாத மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்) தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (For CBSE and other board it is 70% in Class XII). கீழ்காண் அட்டவணையில் குறிப்பிட்ட நாளில் மாணவர்களின் நலன் கருதி பயிற்சியில் பங்கேற்க தகுதியுடைய மாணவர்களை கண்டறிந்து ஒரு பொறுப்பாசிரியருடன் மேற்படி உயர்கல்வி பெறும் வாய்ப்பை பெறவும், பயிற்சியில் பங்கேற்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | தேதி | உயர்கல்வி பெறும் வாய்ப்பு மற்றும் பயிற்சி நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1 | 12.07.2024 | அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர் |

https://forms.office.com/r/hZQuBGEuPm இந்த link ல் பதிவு செய்யலாம்

குறிப்பு: தேர்வுக்கு வரும் மாணவர்கள் Android mobile யை கொண்டு வரவும்

**மேலும் சந்தேகங்களுக்கு**

Naveen kumar – 97896 51825

**இணைப்பு – பார்வையின் கடித நகல்**

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு / அரசு உதவி பெறும் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.

தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படுகிறது. )

3. தலைமையாசிரியர், அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர்.